




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 218 | 31.1.2026 | SATURDAY | THAI : 17 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 218 | 31.1.2026 | சனிக்கிழமை | தை : 17 | விலை : ரூ.5/– |


## மதவெறியை மாய்ப்போம்

# “மகாத்மாவைப் போற்றுவோம்!”



■ சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மதுரை வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மதுரை விமான நிலையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் புத்தகம் வழங்கி வரவேற்றார்.

## முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை: ஜன.31-

“மகாத்மாவை மறைத்து, நாட்டை நாசப்படுத்தத் துடிக்கும் கோட்சேவின் வாரிசுகளுக்குத் தக்க பாடம் புகட்டி, காந்தி பிறந்த மண்ணைக் காத்திடுவோம்” என முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

மகாத்மா காந்தியின் 78வது நினைவு தினத்தை முன்னிட்டு, நாடு முழுவதும் இன்று ‘தியாகிகள் தினம்’ அனுசரிக்கப்படுகிறது.

இந்த நிலையில், முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில்,



“#MartyrsDay: மதவெறியை மாய்ப்போம். மகாத்மாவைப் போற்றுவோம். அமைதி வழியின் வலிமையை உலகுக்குக் காட்டி, ஒற்றுமையுணர்வு தழைக்கப் பாடுபட்டதால், கோட்சேவின் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட நம் தேசத்தந்தை மகாத்மா காந்தி, ஒவ்வொரு இந்தியரின் உள்ளத்திலும் நிலைத்து வாழ்வார்.

மகாத்மாவை மறைத்து, நாட்டை நாசப்படுத்தத் துடிக்கும் கோட்சேவின் வாரிசுகளுக்குத் தக்க பாடம் புகட்டி, காந்தி பிறந்த மண்ணைக் காத்திடுவோம். வெல்வோம் ஒன்றாக” என்று குறிப்பிட்டுள்ளார்.

## “அரசு ஊழியர்கள் போராட்டம் பற்றிய என் கருத்து தவறுதலாக புரிந்து கொள்ளப்பட்டது” மா.சுப்பிரமணியன்

சென்னை: ஜன.31-

“நான் கூறிய அரசு ஊழியர்கள் போராட்டம் பற்றிய கருத்து தவறுதலாக புரிந்து கொள்ளப்பட்டுவிட்டது. உரிமைக்காக போராடுபவர்களை என்றைக்கும் மதிப்பவன் நான்” என தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘பத்திரிகையாளர் சந்திப்பின் போது ஒரு சில போராட்டங்கள் பற்றி கருத்துக் கூற நேரிடும்போது, நான் கூறிய அரசு ஊழியர்கள் போராட்டம் பற்றிய கருத்து தவறுதலாக புரிந்து கொள்ளப்பட்டுவிட்டது. உரிமைக்காக போராடுபவர்களை என்றைக்கும் மதிப்பவன் நான். ஏனென்றால் நானே அமைச்சர் ஆவதற்கு முன்பு ஒரு யூனியன் தலைவராக இருந்தவன் தான்.

அதிலும் குறிப்பாக, அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்ல அரசு ஊழியர்களின் உழைப்பு எவ்வளவு முக்கியமானது என்பதை நன்கு உணர்ந்தவன். அதனால் எனது கருத்தினை அரசு ஊழியர்கள் யாரும் தவறுதலாக புரிந்து கொள்ள வேண்டாம் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்’ எனத் தெரிவித்துள்ளது.

முன்னதாக ஒப்பந்த மருத்துவப் பணியாளர்கள் போராட்டம் குறித்து நேற்று சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், “அவர்கள் 6,7 சங்கங்களாக இருக்கிறார்கள். நாங்கள் அழைத்துப் பேசியிருக்கிறோம். அவர்கள் 2013ல் அதிமுக ஆட்சியில் ஒப்பந்த ஊழியர்களாக பணியமர்த்தப்பட்டார்கள். அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் எடுக்கப்பட்ட தற்காலிக பணியாளர்கள்.

அரசு தேர்தலை சந்திக்க இருக்கிறது என்ற காரணத்தினாலே தற்காலிக பணியாளர்கள், ஒப்பந்த பணியாளர்கள் எல்லோரும் பணி நிரந்தரம் கேட்டு போராடுவது இப்போது பேஷனாகிவிட்டது” என்றார். அமைச்சரின் இந்த பேச்சு பெரும் சலசலப்பை உருவாக்கியது. அமைச்சரின் இந்தக் கருத்துக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இந்தச் சூழலில், அமைச்சர் மா.சுப்பிரமணியன் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.



■ மதுரை மாவட்டம், மதுரை மாநகராட்சி மண்டலம் 2 அலுவலகத்தில், வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் 2026 பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம், இடமாற்றம் தொடர்பாக பெறப்பட்ட படிவங்கள் தொடர்பாக ஆவணங்கள் பதிவேற்றுதல் மற்றும் சரி பார்க்கும் பணி நடைபெற்று வருவதை, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டார்.

## தமிழக முதல்வர் அதிக நிதி வழங்கியதால் ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைந்துள்ளது : அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்

சின்னாளபட்டி, ஜன .31

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொடை வள்ளல்போல் அதிக நிதி வழங்கியதால் ரூ. 85 கோடி மதிப்பில் சிறப்பான முறையில் தனியார் கல்லூரிக்கு இணையாக ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைந்துள்ளது என்று கல்லூரி மாணவர்களுக்கான மடிக்கணினி வழங்கும் விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக பேசியதோடு, ஆத்தூர் தொகுதி மாணவர்களின் நலன் கருதி வேலை வாய்ப்புக்கான பயிற்சி முகாம், டைடல் பார்க், மாபெரும் விளையாட்டு அரங்கம் அமையவுள்ளது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி அளித்தார்.



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு விழா கூட்டுறவு அரசு மற்றும் கலை அறிவியல் கல்லூரியில் 12 கல்லூரிகளில் இறுதி ஆண்டு படிக்கும் 600 மாணவ. மாணவியருக்கான மடிக்கணினி வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் தலைமை தாங்கினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சுபாஷினி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் பாறைப்;பட்டி இராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், ராஜேந்திரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் ஸ்ரீ இராகவ்பாலாஜி வரவேற்று பேசினார். விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் நான் கூட்டுறவு துறை அமைச்சராக இருந்தபோது தமிழக முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஆத்தூர் தொகுதியில் சிறப்பான முறையில் அனைவரும் விரும்பி படிக்கும் வண்ணம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென கோரிக்கை விடுத்தேன். மற்ற மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு கல்லூரி கல்லூரிகள் எல்லாம் ரூ. 15 முதல் 20 கோடியில்தான் அமைந்துள்ளது.

கொடை வள்ளல் போல் தமிழக முதல்வர் அதிக நிதி ஒதுக்கியதால் ரூ. 85 கோடியில் தனியார் கல்லூரிக்கு இணையாக கலைஞர் நூற்றாண்டு விழா கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைந்துள்ளது. இது தவிர ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திலும் அரசு கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டுவரப்பட்டதால், ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த ஏழை மாணவர்களும் உயர்கல்வி கற்கும் நிலை உருவாகியுள்ளது. கடந்த திமுக ஆட்சியின்போது நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தியதால் குறைந்த செலவில் கல்லூரி படிப்பை மாணவர்கள் படிக்கும் நிலைமை உருவாகி உள்ளது. கல்லூரி படிப்பை முடித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் வண்ணம். வேலை வாய்ப்பு பயிற்சி முகாம், டைடல் பார்க் அமைய உள்ளது. இது தவிர மாணவர்களுக்கு சிறந்த விளையாட்டு அரங்கம் அமைத்துக் கொடுக்கப் பட்டு அனைத்து துறைகளிலும் மாணவர்கள் சாதனை படைப்பார்கள், இன்று மாணவர்களுக்கு வழங்கப்படும் மடிக்கணினி அவர்களுக்கு வேலை வாய்ப்பு மட்டும் இன்றி உலகத்தில் உள்ள அனைத்து தகவல்களும் கிடைக்கும் நிலைமை உருவாகி உள்ளது. இதை மாணவர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் கூட்டுறவு மேலாண்மை இயக்குநர் ம.செல்வகுமார், கூட்டுறவு சார் பதிவாளர்கள் அறிவழகன், அம்பிகேஸ்வரன், கல்லூரி நிர்வாக அலுவலர் கணேசன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் பாப்பாத்தி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் ராஜேந்திரன், எம்.சி.பாண்டியன், கலாபச்சை, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்கேயன், காணிக்கைசாமி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் ராஜகணேஷ், வசந்தகுமார், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிறைவாக கல்லூரி முதல்வர் பாலகுருசாமி நன்றி கூறினார்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மனிஷ் நாரணவரே தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில், தேசிய தொழுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மகாராஜ், துணை இயக்குனர் மரு. வேலாயுதம் ஆகியோர் உள்ளனர்.



# இன்ஸ்பெக்டர் பிரேமாவுக்கு உற்சாக வரவேற்பு 95% வழக்குகளை முடித்த திருப்பூர் வடக்கு போலீஸ் நிலையத்துக்கு ராயல் சல்யூட்

திருப்பூர், ஜன.31-

திருப்பூர் மாநகர போலீஸ் நிலையங்களில் ஒன்றாக வடக்கு போலீஸ் நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் கடந்த202425ம் ஆண்டில் தமிழகத்திலேயே சட்டம் ஒழுங்கு, குற்ற வழக்குகள், திருட்டு உள்ளிட்ட 95 சதவீத வழக்குகளை முடித்து, தமிழகத்தின் தலை சிறந்த 2வது போலீஸ் நிலையமாக திருப்பூர் வடக்கு போலீஸ் நிலையத்தை தமிழக அரசு அறிவித்தது. இதை தொடர்ந்து சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விருது வழங்கி சிறப்பித்தார்.

2வது இடத்திற்கான பெற்று திருப்பூர் வந்த இன்ஸ்பெக் டர் பிரேமாவுக்கு போலீஸ் நிலை யத்தில் பணியாற்றும் போலீசார்கள் உற்சாக வரவேற்பு அளித்ததுடன், கேக் வெட்டி கொண்டாடி னர். மேலும், கடந்த 2023 ம் ஆண்டு முதல் இடமும், 2024ம் ஆண்டு 2ம் இடமும், 2025ம் ஆண்டு 2ம் இடமும் பெற்றுள்ளது.



■ திண்டுக்கல் மாநகராட்சியின் 2026ம் ஆண்டின் முதல் மாமன்ற கூட்டம் மாமன்ற கூட்டத்தில் நடைபெற்றது இதில் மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் மற்றும் துணை மேயர் ராஜப்பா, மாநகராட்சி ஆணையர் தலைமையில் நடைபெற்றது.




# ஒட்டன்சத்திரம் நகராட்சி 10வது வார்டில் மருத்துவ கழிவுகளால் தொற்றுநோய் பரவும் அபாயம் : கண்டும் காணாமல் கவுன்சிலர் நகராட்சி நிர்வாகம்

திண்டுக்கல், ஜன.31-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு உட்பட்ட 10வது வார்டு பகுதியில் நீண்ட நாட்களாக காலாவதியான மருத்துவக் கழிவுகள் அதிகமாக கொட்டப்படுவதால் அங்கு வசிக்கின்ற 2000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பொதுமக்கள் நோய் அபாயம் ஏற்படும் என்ற அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

மருத்துவமனைகள் ஆய்வகங்கள் மற்றும் சுகாதார மையங்களில் இருந்து உருவாக மருத்துவ கழிவுகள் சரியான முறையில் மேலாண்மை செய்யப்படாவிட்டால் அது மனித ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர் ஊசிகள் சிரஞ்சுகள் இரத்தம் கலந்த பருத்திகள் பயன்படுத்தப்பட்ட முகக் கவசங்கள் மருந்து பாட்டில்கள் போன்றவை மருத்துவ கழிவுகள் அடங்கும்.

இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கோரிக்கையில் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் அதிகம் வருகை தரும் இடத்தில் இவ்வாறு மருத்துவக் கழிகள் வீசப்படுவது கடும் சுகாதார சீர்கேடு என்றும் டெங்கு மலேரியா உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாகவும் தெரி வித்தனர்.

இதுகுறித்து நகராட்சி நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து மருத்துவ கழிவுகளை அகற்றுவதுடன் எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க கண்காணிப்புகளை அதிகரிக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

# ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி மதிப்பெண் 40 % சதவீதமாக குறைக்க தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்கம் கோரிக்கை

சென்னை, ஜன.31-

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில இணை பொதுச் செயலாளர் அ.ரகமதுல்லா வெளி யிட்டுள்ள அறிக்கையில் ஆசிரியர் தகுதித் தேர்வு மதிப்பெண்ணை மாற்றுத்திறனாளி தேர்வுகளுக்கு 40 சதவீதமாக குறைத்து அரசாணையை திருத்தம் செய்து வெளியிட வேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உரிமையோடு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தற்போது அரசாணை எண் 23,28.01. 2026 இல் பொது பிரிவினருக்கு எவ்வித மாற்றமும் இல்லாமல் இட ஒதுக்கீட்டு பிரிவினருக்கு 55 லிருந்து 50ஆகவும் எஸ்சி எஸ்டி பிரிவதற்கு 40 சதவீதமாகவும் திருத்தம் செய்து அரசாணை வெளி யிடப்பட்டுள்ளது.

ஆந்திரா தெலுங்கானா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் உள்ளது போல மாற்றுத்திறனாளிகள் தேர்வுகளுக்கும் 40 சதவீத மதிப்பினை நிர்ணயம் செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட வேண்டுமென உரிமையோடு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். எங்கள் துறை அமைச்சர் முதல்வர் நிச்சயம் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையோடு உரிமையோடும் காத்துக் கொண்டுள்ளோம்.

# புளியங்குடியில் தேமுதிக பிரேமலதா, விஜயபிரபாகரன் பங்கேற்பு - தேர்தல் வாக்குறுதிகள் அறிவிப்பு

தென்காசி, ஜன.31-

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் நடைபெற்ற தேமுதிக கூட்டத்தில், கழக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் மற்றும் விஜயபிரபாகரன் கலந்து கொண்டனர்.



அப்போது பேசிய பிரேமலதா விஜயகாந்த், தேர்தல் வெற்றிக்குப் பிறகு புளியங்குடி அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்படும். அவசர சிகிச்சைக்காக தென்காசி மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய நிலை மாற்றப்பட்டு, புளியங்குடி அரசு மருத்துவமனை யிலேயே கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும். எலுமிச்சைக்கு உரிய விலை பெற்றுத் தருவதுடன், அதனை உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். நகரில் உள்ள போக்குவரத்து நெரிசல் சரி செய்யப்பட்டு, விபத்துகளைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மக்களுக்கு இலவசங்களோ, பணமோ முக்கியமல்ல. விபத்தில்லா சாலைகள், உழைப்புக்கு ஏற்ற ஊதியம், அரசு பள்ளிகள் மற்றும் அரசு மருத்துவமனைகளின் தர உயர்வே கேப்டனின் கனவாக இருந்தது.

தமிழ்நாடு முழுவதும் குடிநீர் குழாய் இணைப்புக்காக சாலைகள் தோண்டப்பட்டு மூடப்படாமல் விடப்படுவதால் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். இது கண்டனத்திற்குரியது. அந்த சாலைகள் விரைவில் சரி செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர தேமுதிக உறுதியாக துணை நிற்கும்.

முன்னதாக புளியங்குடி நகருக்கு வருகை தந்த பிரேமலதா விஜயகாந்த் அவர்களுக்கு, தேமுதிக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர். அப்போது கேப்டன் விஜயகாந்தின் படத்தை எடுத்து நீண்ட நேரம் முத்தமிட்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் சோலை கனகராஜ், புளியங்குடி நகரச் செயலாளர் மாரியப்பன், கிருஷ்ணன், மாரிச்சாமி, நெசவாளர் முருகன், உசேன் முருகன், ராமகிருஷ்ணன், கடற்கரை, ராஜ், விஜயா, இசக்கிமுத்து, மாவட்ட கேப்டன் மன்ற செயலாளர் முத்தையா, பொதுக்குழு உறுப்பினர்கள் செந்திலாதிபன், மைதீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




# திருப்பூர் SVKT குழுமம் இணைந்து வழங்கிய பழனி பாதயாத்திரை பக்தர்களுக்கான மாபெரும் அன்னதான விழா

திண்டுக்கல், ஜன.31-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு எதிர்ப்புறம் சிறப்பாக நடைபெற்றது. ஆண்டுதோறும் பழனி முருகன் தரிசனத்திற்காக பாதயாத்திரையாகச் செல்லும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பயன்பெறும் வகையில் இந்த அன்னதான நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த அன்னதான விழாவில் பாதயாத்திரை பக்தர்களுக்கு காலை முதல் இரவு வரை சுவையான மற்றும் சத்தான உணவு வழங்கப்பட்டது. நீண்ட தூரம் நடந்து வரும் பக்தர்களின் களைப்பை போக்கும் வகையில் குடிநீர், மோர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. பக்தர்கள் அனைவரும் திருப்தியுடன் உணவருந்தி, SVKT குழுமத்தின் சேவையை பாராட்டினர்.

கடந்த 12 ஆண்டுகளாக தொடர்ந்து எந்தவித இடையூறும் இன்றி இந்த அன்னதான விழா நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஆன்மிக சேவையுடன் சமூக பொறுப்புணர்வையும் இணைத்து செயல்பட்டு வரும் SVKT குழுமத்தின் இந்த முயற்சி பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

நிகழ்ச்சியில் SVKT குழும நிர்வாகிகள், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு சேவையாற்றினர்.




■ திண்டுக்கல் மாவட்ட பேருந்து நிலையத்தில், சாலை பாதுகாப்பு மாதம்2026 குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் அவர்கள் தொடங்கி வைத்தார்.



■ மதுரையில் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர் பி உதயகுமார் அவர்களை மரியாதை நிமித்தமாக திசையன்விளை பேரூராட்சி மன்ற தலைவி ஜான்சி ராணி முருகானந்தம் அவர்கள் சந்தித்தபோது...



■ தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் சார்பில், திமுக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தலைமையில், இன்று திருநெல்வேலியில் கருத்துக் கேட்பு கூட்டம் தொடங்கியது. இதில் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு துறையினர் மற்றும் பொதுமக்களைச் சந்தித்து, தங்களின் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். கனிமொழி அவர்களை சந்தித்து நாங்குநேரி பகுதிகளுக்கு தேவையான கோரிக்கைகளை நெல்லை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் கிரகாம்பெல் அவர்கள் உடன் நாங்குநேரி மேற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் சின்னத்துரை வழங்கினார்.



# பெருமாநல்லூர் தேவராயன் CBSE பள்ளியில் தேசிய பத்திரிக்கை தினக் கொண்டாட்டம்

திருப்பூர், ஜன.31-

திருப்பூர் மாவட்டம் அவினாசி தாலுகா தேவராயன் CBSE பள்ளியில், தேசிய பத்திரிக்கை தினம் கொண்டாடப்பட்டது. இதில் மாணவர்களுக்கு பத்திரிக்கை உருவான விதம், செய்தி சேகரித்தலில் பத்திரிகையாளர்களின் பங்கு மற்றும் அதன் நம்பகத்தன்மை பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. பள்ளி மழலையர் வகுப்பு மாணவி கனிஷ்கா செய்தித்தாள் களில் வடிவமைக்கப் பட்ட ஆடை அணிந்து மாணவ மாணவிகளுக்கு செய்தித்தாள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மேலும் மாணவர்கள் ஆசிரியர்கள் இணைந்து செய்தித்தாள் திரள் வாசிப்பு (Mass Reading) பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர். பள்ளி நூலகர் திரு.சிவகுமார் ஒருங்கிணைத்தார். பள்ளி முதல்வர் திரு.பாலமுருகன் மாணவர்களுக்கு வாழ்த்துகளையும் ஆசிரியர்களுக்கு நன்றியும் தெரி வித்தார்.



# தென்காசி போக்குவரத்துத்துறை சார்பில் போதை ஒழிப்பு துண்டு பிரசுரங்களை பேருந்துகளில் ஒட்டி விழிப்புணர்வு

தென்காசி, ஜன.31-

தென்காசி புதிய பேருந்து நிலைய பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, காவல்துறை மற்றும் போக்குவரத்துத்துறை சார்பில், போதை ஒழிப்பு தொடர்பான துண்டு பிரசுரங்களை பேருந்துகளில் ஒட்டி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

பின்னர் ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், தென்காசி மாவட்டத்தில் இன்றைய தினம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, காவல்துறை மற்றும் போக்குவரத்துத்துறை சார்பில், தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை ஒழிப்பது தொடர்பான துண்டு பிரசுரங்களை பொதுமக்கள் அதிகம் பயணிக்கின்ற பேருந்து, ஆட்டோ, கார் ஆகிய வாகனங்களில் ஒட்டி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கலைநிகழ்ச்சிகள் வாயிலாகவும், போதை அதன் அழிவின் பாதை என்ற நோக்கத்துடன் சமுதாயத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் எதிராக எழுந்திருக்கும் ஒரு பிரச்சனை. ஆகவே, தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை முற்றிலும் ஒழித்து போதை இல்லா தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., தெரி வித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ரா.சங்கர், உதவி ஆணையர் (கலால்) ராமச்சந்திரன், தென்காசி காவல் துணை கண்காணிப்பாளர் அதியமான், வட்டார போக்குவரத்து அலுவலர் சரவணபவன் மற்றும் அரசு அலுவலர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாதவிடாய் ஆரோக்கியம் ஓர் அடிப்படை உரிமை: உச்ச நீதிமன்றம்



புதுடெல்லி: ஜன.31-

மாதவிடாய் ஆரோக்கியம் ஓர் அடிப்படை உரிமை என்று தெரிவித்துள்ள உச்ச நீதிமன்றம், அனைத்து பள்ளி மாணவிகளுக்கும் இலவசமாக சானிட்டரி பேட்களை பள்ளிகள் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு மத்திய அரசின் பள்ளி செல்லும் மாணவிகளுக்கான மாதவிடாய் சுகாதாரக் கொள்கையை நாடு முழுவதும் அமல்படுத்தக் கோரி ஜெயா தாக்கூர் என்பவர் கடந்த டிச.10, 2024 ல் தாக்கல் செய்த பொது நல மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வு, இடைக்கால உத்தரவை வழங்கியுள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் அந்த உத்தரவில், ''தனியார் மற்றும் அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளுக்கு மட்கும் தன்மை கொண்ட மாதவிடாய் சானிட்டரி பேட்கள் இலவசமாக வழங்கப்படுவதை அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் உறுதி செய்ய வேண்டும். மாதவிடாய் ஆரோக்கியம் ஓர் அடிப்படை உரிமை. அரசியலமைப்பின் 21 வது பிரிவின் கீழ் உள்ள வாழ்வதற்கான உரிமையின் ஒரு பகுதி இது.

அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் தனித்தனி கழிப்பறைகள் இருப்பதை அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும். அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற கழிப்பறைகள் வழங்கப்பட வேண்டும்.

கழிப்பறைகள் மற்றும் சானிட்டரி பேட்கள் வழங்குவதை உறுதிப்படுத்த அரசாங்கங்கள் பொறுப்பேற்க வேண்டும். இந்த வசதிகளை தனியார் பள்ளிகள் வழங்கத் தவறினால் அவற்றின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் தள்ளி வைக்கப்பட்டது.

# 'தமிழகத்தில் அன்றாடம் சீரழியும் சட்டம் ஒழுங்கு' கடலூர் சம்பவத்துக்கு நயினார் நாகேந்திரன் கண்டனம்



சென்னை: ஜன.31-

'தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு என்னும் வார்த்தை இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறதா? அல்லது ஒட்டுமொத்தமாக சமாதி கட்டப்பட்டுவிட்டதா?' என கடலூர் விவசாயியை பெட்ரோல் ஊற்றி எரிக்க முயன்ற சம்பவத்துக்கு தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'கடலூர் மாவட்டம் மாளிகம்பட்டு கிராமத்தில் நட்டநடு சாலையில் வைத்து 70 வயதான விவசாயி ஒருவரை மர்ம கும்பல் பெட்ரோல் ஊற்றி எரிக்க முயற்சித்திருப்பது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு என்னும் வார்த்தை இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறதா? அல்லது ஒட்டுமொத்தமாக சமாதி கட்டப்பட்டுவிட்டதா? தலைநகரிலும் பாதுகாப்பில்லை. கிராமத்திலும் பாதுகாப்பில்லை. பச்சிளம் குழந்தைக்கும் பாதுகாப்பில்லை. வயதான முதியவருக்கும் பாதுகாப்பில்லை! வீட்டிலும் பாதுகாப்பில்லை, சாலையிலும் பாதுகாப்பில்லை.

இத்தகைய கொடூர ஆட்சியை மீண்டுமொரு முறை ஆட்சிக் கட்டிலில் அமர வைத்து, மீண்டும் ஒரு நரக வேதனையை மக்கள் அனுபவிக்கத் தயாராக இல்லை! திமுகவை வெளியேற்றி, தமிழகத்தை மீட்கும் தினம் தொலைவில் இல்லை' என அவர் தெரிவித்துள்ளார்.

# "தேமுதிகவுக்கு பேரம் பேச வேண்டிய அவசியம் இல்லை, ஆனால்..." டென்ஷன் ஆன பிரேமலதா

திருநெல்வேலி: ஜன.31-

"யாரிடமும் பேரம் பேச வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. யார் மதிப்பு கொடுப்பார்களோ, அந்த இடத்தில் தேமுதிக இருக்கும்'' என அக்கட்சியின் பொதுசெயலர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேயிலி நடைபெற்ற தேமுதிக வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டத்தில் பேசிய அக்கட்சியின் பொதுச் செயலர் பிரேமலதா விஜயகாந்த், பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், சமூக ஊடகங்களை சாடினார். பழுத்தமரம்தான் கல்லடி படும் என்று தெரிவித்த அவர், உங்கள் செய்திகளுக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று பேசினார்.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை தொகுதி தேமுதிக வாக்குச் சாவடி முகவர்கள் கூட்டத்தில் அவர் பேசும்போது, "ஆளுங்கட்சி, ஆண்ட கட்சி, மத்தியில் ஆளும் கட்சி எதுவுமே கூட்டணி குறித்து இறுதியாக அறிவிக்காத நிலையில், நாங்கள் மட்டும் கூட்டணியை குறித்து தெரிவிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது ஏன்? யாரிடமும் பேரம் பேச வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. 2 பக்கமும் பேசுவதாக கூறுவது தவறு. அனுமானங்களுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியதில்லை.

உங்கள் டிஆர்பியை உயர்த்துவதற்காக தவறான செய்திகளை சொல்ல வேண்டாம். தேமுதிக எனது குடும்பம். அதிலுள்ள என் பிள்ளைகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது கட்சியின் தலைமை பொறுப்பில் தாயாக இருக்கும் எனக்கு தெரியும். இந்தக் கட்சியை நம்பி லட்சக்கணக்கான தொண்டர்கள் இருக்கிறார்கள். எனவே யோசித்துத்தான் எதையும் முடிவு செய்ய முடியும். தொண்டர்கள் விரும்பும் வகையில் கூட்டணி அமையும்.

நல்லநேரத்தில் முடிவு எடுக்கப்படும். 2026 தேர்தலில் சரித்திரம் படைப்போம். நாங்கள் இடம்பெறும் கூட்டணிதான் ஆட்சி அமைக்கும். பழுத்த மரம்தான் கல்லடிபடும் என்பார்கள். அப்படித்தான் இப்போது நிலைமை இருக்கிறது. எனவே, உங்களது செய்திகளுக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை'' என்று ஆவேசமாக தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலும், "தேர்தல் அறிவிக்க நாட்கள் உள்ளது. இன்னும் பிப்ரவரி மாதம் வரை காலம் இருக்கிறது. எனவே கூட்டணியை அறிவிப்பதில் கால தாமதம் என்ற பேச்சுக்கே இடமில்லை. யார் மதிப்பு கொடுப்பார்களோ, அந்த இடத்தில் தேமுதிக இருக்கும்'' என்றார்.

கூட்டணி தொடர்பான கேள்விகளின்போது பிரேமலதா விஜயகாந்த், டென்ஷனானார். மேலும், "நாங்கள் எங்கள் குடும்பத்துக்குள் பேசுவதையெல்லாம் பொதுவெளியில் சொல்ல முடியாது. உங்கள் குடும்பத்தில் பேசுவதையெல்லாம் வெளியே சொல்வீர்களா?'' என்று செய்தியாளர்களிடம் எதிர் கேள்வி எழுப்பினார்.

சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடுவீர்களா என்ற நேரிடையான கேள்விக்கு, 'உரிய நேரத்தில் கண்டிப்பாக விளையாடுவோம்' என்று மழுப்பினார். டாஸ்மாக் இல்லாத தமிழகம் என்பதை தேர்தல் வாக்குறுதியாக அளிப்பீர்களா என்ற கேள்விக்கு, கூட்டணி கட்சியின் தேர்தல் அறிக்கையில் அதை சொல்வதற்கு வலியுறுத்துவதாக தெரிவித்தார்.

# தென்காசி ஆலங்குளத்தில் தேசிய பெண் குழந்தைகள் தின விழிப்புணர்வு பேரணி



ஆலங்குளம், ஜன.31-

தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் அமைந்துள்ள சர்தார் ராஜா பொறியியல் கல்லூரி மற்றும் தென்காசி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் இணைந்து நடத்திய தேசிய பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு மாபெரும் விழிப்புணர்வு பேரணியானது கல்லூரியின் தலைவர் ஜீசஸ் ராஜா வழிகாட்டுதலின்படி சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக மாவட்ட பெண் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் எல். அலெக்ஸ் கொடியசைத்து பேரணியை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் நிர்வாக இயக்குனர் பேராசியர் கனக பாண்டியன் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு பேரணியானது, ஆலங்குளம் (பழைய பேருந்து நிலையம் அருகில்) காவல் நிலையத்தில் இருந்து தொடங்கி நகரின் பிரதான சாலை வழியாக ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் நிறைவு பெற்றது. இந்த பேரணியில் மாணவ மாணவிகள் அனைவரும் 1930 என்ற எண் வடிவத்தில் நின்று இணைய பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இது பொதுமக்களிடையே பெரும் கவனத்தை ஈர்த்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பேரணியில் கல்லூரி மாணவ மாணவிகள் பேராசிரியர்கள் காவல்துறை அதிகாரிகள் பாதுகாப்பு நல வாரிய அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் குழந்தைகள் நல துறை தலைவர் விஜயராணி தென்காசி மாவட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றப் பிரிவு காவல் நிலைய உதவி ஆய்வாளர் சாந்தி, ஆலங்குளம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் (இணைய வழி குற்றப்பிரிவு) சிவசங்கரி, பாதுகாப்பு அலுவலர் கவிதா, குழந்தைகள் நலத்துறை அலுவலர் இஸ்மாயில், பாவூர்சத்திரம் காவல் ஆய்வாளர் ஸ்டீபன் வினோத் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் நிறைவில் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜெயக்குமார் நன்றி கூறினார் நன்றி கூறினார்.

இந்த விழிப்புணர்வு பேரணிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் இயந்திரவியல் துறைபேராசிரியர் மணிராஜ் தலைமையில் அனைத்து பேராசிரியர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# திருப்பூர் கல்லூரி மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கிய சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ்



திருப்பூர். ஜன.31-

வணக்கம் திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில், தமிழக அரசு உயர்கல்வி பயிலும் கல்லூரி மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ், திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயிலும் 402 மாணவியர்களுக்கு தமிழக அரசின் மடிக்கணினியை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் வழங்கி சிறப்புரை ஆற்றினார். இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் டி.வசந்தி வரவேற்புரை வழங்கினார். விழாவில் திருப்பூர் மாநகர திமுக செயலாளர் டி.கே.டி.நாகராஜன், 38 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வி.சாந்தாமணி முருகசாமி கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவில் கல்லூரி நிர்வாக அலுவலர் முனைவர் என். நிர்மல்ராஜ் , கல்லூரி துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர். நிறைவாக முனைவர் கி.சுதா தேவி கல்லூரி பேரவை பொறுப்பாளர் நன்றியுரை வழங்கினார்.

# இந்தியாவில் இளம் அரசியல் தலைவர்களில் இரும்பு மனிதராக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஐ.பி.செந்தில்குமார் பேச்சு



சின்னாளபட்டி, ஜன.31-

இந்தியாவில் உள்ள இளம் அரசியல் தலைவர்களில் இரும்பு மனிதராக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உள்ளார் என்று ரெட்டியார்சத்திரத்தில் நடைபெற்ற இளைஞரணி ஆலோசனைக் கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் பேசியதோடு, விருதுநகரில் நடைபெறும் மண்டல மாநாட்டில் ஒருவர் கூட தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று ஐ.பி.செந்தில்குமார் வேண்டுகோள் விடுத்தார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் ரெட்டியார்சத்திரம் வடக்கு, மேற்கு, தெற்கு, கிழக்கு ஒன்றிய திமுக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் மண்டல மாநாடு ஆலோசனை கூட்டம் ரெட்டியார்சத்திரம் கலைஞர் திடலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், கிழக்கு மாவட்ட செயலாளருமான ஐ.பி.செந்தில்குமார் தலைமை தாங்கினார். மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் ப.க.சிவகுருசாமி, ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், ரெட்டியார்சத்திரம் எம்.இன்பராஜ், சு.மணி, பேரூர் கழக செயலாளர்கள் கன்னிவாடி இளங்கோவன், அகரம் ஜெயபால், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கணேசன், துணை அமைப்பாளர் பா.ராஜேஸ்பெருமாள், மாவட்ட வர்த்தர் அணி அமைப்பாளர் பொன்முருகன், கன்னிவாடி பேரூராட்சி மன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், ஸ்ரீராமபுரம் பேரூராட்சி துணைத் தலைவர் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஏ.ஆர்.கே ரமேஷ் வரவேற்புரை ஆற்றினார். திமுக மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சி.ஆனந்தகுமார், கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, துணைச் செயலாளர் மு.பிலால்உசேன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞரணி நிர்வாகிகள் மத்தியில் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் அவர்கள் பேசும்போது இந்த கூட்டத்தில் 80 சதவீதம் படித்த பட்டாதாரி இளைஞர்கள் வந்திருக்கிறீர்கள், உங்கள் முன்னோர்கள் இப்படி பட்டப்படிப்பு படிக்கும் நிலைமை அப்போது இருந்ததா, மேல் தட்டு மக்கள் மட்டும் உயர்கல்வி கற்கும் நிலை மாறி, அடித்தட்டு பாரம மக்களும் உயர்கல்வி கற்கும் நிலையை கொண்டு வந்தவர்கள் நீதிக்கட்சி ஜஸ்டிஸ் சண்முகம், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர். அவர் வழியில் நின்று திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தமிழக முதல்வராக இருக்கும் ஐயா மு.க.ஸ்டாலின் அவர்களால் வளர்க்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்களால் பாதுகாக்கப்பட்டு இன்று நம்மிடம் ஒப்படைத்து இருக்கும் இயக்கம்தான் இளைஞரணி என்ற மாபெரும் இயக்கம் என்றார். வருங்கால தமிழகமாக உதயநிதி ஸ்டாலின் உள்ளார். நீங்கள்; கட்சியில் உழைக்கக்கூடிய உழைப்பிற்கு தக்க பலனை உங்களுக்கு அவர் வழங்குவார். இது உறுதி.

கூட்டத்தில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் அருளானந்தம், பெருமாள், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் செல்வன், ஒன்றிய துணை செயலாளர் பொன்மணி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் முருகன் (எ) சின்னு, பால்ராஜ், புதுச்சத்திரம் மெர்ஸி, சில்வார்பட்டி ராமமூர்த்தி, மாவட்ட பிரதிநிதிகள் எல்லை இராமகிருஷ்ணன், இளங்கோ, போலியமனூர் கிளைச் செயலாளர் ராஜ் குமார் மற்றும் பேரூர் அமைப்பாளர்கள், கிளைக்கழக அமைப்பாளர்கள், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், கிளைக்கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ திண்டுக்கல் மாவட்ட பேருந்து நிலையத்தில் போதைப்பொருள் இல்லா தமிழகம் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பிரசுரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் ஆட்டோவில் ஒட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

# தூய்மைப் பணியாளர்களுக்கு குப்பை அள்ளும் வாகனத்தில் உணவு: அண்ணாமலை கண்டனம்

சென்னை, ஜன.31-

'ஊதிய உயர்வு கேட்ட தூய்மைப் பணியாளர்களை அவமானப்படுத்தும் விதமாக, கோயம்புத்தூரில், குப்பை அள்ளும் வாகனத்தில், அவர்களுக்கான உணவு கொண்டு செல்லப்பட்டது. தரக்குறைவான உணவு வழங்கும் ஒப்பந்ததாரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்' என தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ' தமிழகம் முழுவதும் உள்ள தூய்மைப் பணியாளர்கள், ஊதிய உயர்வு கேட்டு கோரிக்கை வைத்தபோது, கூடுதல் ஊதியம் வழங்காமல், அவர்களுக்கு உணவு வழங்குகிறோம் என்ற பெயரில் விளம்பர நாடகம் நடத்தினார் முதல்வர் ஸ்டாலின். மேலும், ஊதிய உயர்வு கேட்ட தூய்மைப் பணியாளர்களை அவமானப்படுத்தும் விதமாக, கோயம்புத்தூரில், குப்பை அள்ளும் வாகனத்தில், அவர்களுக்கான உணவு கொண்டு செல்லப்பட்டது.

இந்த நிலையில், தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் உணவு, தரமற்றதாக இருக்கிறது என்றும், திமுக அரசு வழங்கும் இந்த உணவை உண்ட தூய்மைப் பணியாளர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளதாகவும், திருநெல்வேலி தூய்மைப் பணியாளர்கள் புகார் தெரிவித்துள்ளனர். அது மட்டுமின்றி, இந்த தரமற்ற உணவைக் கூட, அவர்களை வெகுநேரம் காத்திருக்க வைத்தே வழங்குகிறது திமுக அரசு.

முதல்வர் ஸ்டாலினின் ஆழ்மனதில், அவர் கடையேழு வள்ளல்களில் ஒருவர் என்ற எண்ணத்தை யாரோ விதைத்துள்ளார்கள் போலும். நியாயமான ஊதிய உயர்வு கொடுப்பதை விட்டுவிட்டு, தரமற்ற உணவை வழங்கி, பொதுமக்களுக்கான சுகாதாரப் பணியை மேற்கொள்ளும் தூய்மைப் பணியாளர்களின் சுயமரியாதையைக் காயப்படுத்திக் கொண்டிருக்கிறார். மக்கள் வரிப்பணத்தில், மக்கள் பணியை மேற்கொள்ளும் தூய்மைப் பணியாளர்களுக்குத் தரமான உணவைக் கூட வழங்க முடியவில்லை என்றால், எதற்காக வெட்டி விளம்பரங்கள் உங்களுக்கு?.

தூய்மைப் பணியாளர்கள் யாரும், உணவுக்காக உங்களிடம் வந்து நிற்கவில்லை. தங்கள் பணிகளை, நேர்மையாகவும், நியாயமாகவும் மேற்கொள்ளும் அவர்களைத் தொடர்ந்து அவமானப்படுத்திக் கொண்டிருப்பதை ஏற்கவே முடியாது. உடனடியாக, தரக்குறைவான உணவு வழங்கும் ஒப்பந்ததாரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், உணவு வழங்கும் விளம்பர நாடகத்தை நிறுத்திக் கொண்டு, அவர்களுக்கான நியாயமான ஊதிய உயர்வை வழங்க வேண்டும் என்றும், திமுக அரசை வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# "காங்கிரஸ் உடன் திமுகவுக்கு எந்த மோதலும் இல்லை" கனிமொழி எம்.பி

நெல்லை, ஜன.31-

"காங்கிரஸ் உடன் திமுகவுக்கு எந்த மோதலும் இல்லை. உறவு சுமுகமாகவே உள்ளது" என்று கனிமொழி எம்.பி தெரிவித்துள்ளார்.



2026 சட்டமன்ற தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு கருத்து கேட்பு கூட்டம் நெல்லை சந்திப்பில் உள்ள தனியார் விடுதியில் குழு தலைவரும் திமுக துணை பொதுச் செயலாளருமான கனிமொழி எம்.பி தலைமையில் நடைபெற்றது. இதில் குழு உறுப்பினர்கள் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம் அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எழிலன், தமிழரசி ரவிக்குமார், செய்தித் தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்தரன், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி சந்தானம் ஆகியோர் கலந்துகொண்டு மனுக்களை பெற்றனர்.

இதில் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த வணிகர்கள் சங்கம், விவசாயிகள், தொழிலாளர்கள், பல்வேறு பொதுநல அமைப்புகள், அரசு ஊழியர் சங்கங்கள் ஆகியோர் கோரிக்கை மனுக்களை குழுவிடம் அளித்தனர்.

பின்னர் கனிமொழி கூறியது: "திமுக தேர்தல் அறிக்கையின் மீது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை மனுக்களாகத் தந்து வருகிறார்கள்.

"ஒரு வாக்குறுதியைக் கொடுத்தால், அதை நிச்சயம் நிறைவேற்றக்கூடிய ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான்" என்று மக்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

அடுத்து அமையப்போவது திமுக ஆட்சிதான் என்கிற நம்பிக்கையோடுதான் மக்கள் மனுக்களைத் தருகிறார்கள். நிச்சயமாகப் புதிய கட்சிகள் கூட்டணிக்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது, அவ்வாறு எந்தக் கட்சி வரும், யாரை இணைப்பது என்பதைப் பற்றிய முடிவை முதல்வர்தான் அறிவிப்பார்.

எந்தக் கருத்துக் கணிப்பு வந்தாலும், வராவிட்டாலும் தேர்தல் களம் என்பது திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்குச் சாதகமாக இருப்பதை கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

ராகுல் காந்தியுடனான பேச்சுவார்த்தை மிகவும் சுமுகமாக இருந்தது. கூட்டணியை நான் உறுதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், கடந்த பல ஆண்டுகளாகவே காங்கிரஸ் இயக்கத்தோடு திமுக கூட்டணியில்தான் இருந்து வருகிறது. எங்களுக்குள் எந்த மோதல் போக்கும் இல்லை. உறவு சுமுகமாகவே உள்ளது" என்றார் கனிமொழி எம்.பி.

காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர் தன்மானமே முக்கியம் என்று பேசியது குறித்த கேள்விக்கு, "எல்லாருக்கும் தன்மானம்தான் முக்கியம். சுயமரியாதை என்பது அனைவருக்கும் பொதுவானது. தன்மானம் முக்கியம் இல்லை என்று யாரும் சொல்லப்போவது இல்லை" என்று கனிமொழி தெரிவித்தார்.

# வரும் பிப். 20க்குள் கோட்டூர்புரம் திட்டப்பகுதி திறக்கப்பட உள்ளது: அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்

சென்னை, ஜன.31-

வரும் பிப். 20க்குள் திருக்கரங்களால் கோட்டூர்புரம் திட்டப்பகுதி திறக்கப்பட உள்ளது: அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார். அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் இன்று (30.1.2026) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோட்டூர்புரம் திட்டப்பகுதியில் ரூ.307.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 1800 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசுகையில்; குடிசைப் பகுதியில் வாழும் மக்கள் கான்கீரிட் வீடுகளில் வாழ வேண்டும் என்ற நல்ல நோக்கில் கலைஞரால் குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கோட்டூர்புரம் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வழங்கப்பட்டது.



அப்போது கட்டப்பட்ட குடியிருப்பின் அளவு 216 ச.அடி அளவு ஆகும். அன்றைய தினம் தரை மற்றும் 2 தளங்களுடன் 1476 குடியிருப்புகள் கட்டப்பட்டது. இப்பொழுது நமது அரசு பொறுப்பேற்ற பிறகு 216 ச.அடி பரப்பளவில் மக்கள் வாழ்வது சிரமம் என்று கருதி நமது முதலமைச்சர் குறைந்தது 400 ச.அடி பரப்பளவில் குடியிருப்புகள் இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டதன் அடிப்படையில் இன்றைய தினம் கட்டப்பட்டு வரும் அனைத்து குடியிருப்புகளும் 400 ச.அடி பரப்பளவிற்கு குறையாமல் கட்டப்பட்டு வருகின்றன. மறுகட்டுமான திட்டத்தின் கீழ் இங்கு இருந்த 1476 குடியிருப்புகள் இடிக்கப்பட்டு 1800 குடியிருப்புகள் தூண் மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டு வருகின்றது.

இத்திட்டப்பகுதியில் 90 % (சதவீத) பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள 10 % (சதவீத) பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு வருகின்ற 2026 பிப்ரவரி மாதம் 20 ம் தேதிக்குள் நமது முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டு இங்கு இருந்த அனைத்து குடும்பங்களுக்கும் மீண்டும் குடியிருப்பு வழங்கப்படும். ஏழை எளிய மக்களின் நலனை கருத்தில் கொண்டு முதலமைச்சர் பயனாளிகளின் பங்கு தொகையை ரூ.1.50 இலட்சமாக குறைத்ததோடு மட்டுமல்லாமல் மாதத் தவணையில் செலுத்த உத்தரவிட்டுள்ளார். மேலும் முதலமைச்சர் இன்னும் 5 நாட்களில் சென்னையில் 5 திட்டப்பகுதிகள், மற்ற மாவட்டங்களில் 11 திட்டப்பகுதிகள் மொத்தம் 16 திட்டப்பகுதிகளில் ரூ.1238 கோடி மதிப்பீட்டில் 9696 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைக்க உள்ளார்கள்.

# 500 மீட்டர் சுற்றளவில் முருகன் சிலை அமைக்க அனுமதிக்க முடியாது

## சென்னை உயர் நீதிமன்றம் திட்டவட்டம்

மருதமலை, ஜன.31-

பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் இருந்து 500 மீட்டர் சுற்றளவில் முருகன் சிலை அமைக்க அனுமதிக்க முடியாது என சென்னை உயர் நீதிமன்றம் திட்டவட்டம். மருதமலை வனப்பகுதியில் 184 அடி உயரத்துக்கு முருகன் சிலை அமைக்க எதிர்ப்பு. வனப்பகுதியில் இருந்து 500 மீட்டருக்கு அப்பால் வேறு இடத்தை தேர்வு செய்ய அறநிலையத்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# சிறந்த இசையமைப்பாளர் விருது வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு ஏ.ஆர்.ரஹ்மான் நன்றி

சென்னை, ஜன.31-

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் வெளியிட்டுள்ள எக்ஸ் வலைத்தள பதிவில், "பொன்னியின் செல்வன் 1 படத்திற்காக சிறந்த இசையமைப்பாளருக்கான தமிழ்நாடு திரைப்பட



விருது பெறுவதில் பெருமை கொள்கிறேன். இந்த அங்கீகாரம் அளித்த தமிழ்நாடு அரசுக்கு மனமார்ந்த நன்றி. விருது பெறும் அனைவருக்கும் எனது பாராட்டுகள்,"இவ்வாறு தெரிவித்தார்.

# சென்னை அண்ணா நகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் தீர்ப்பை ஒத்திவைத்தது உயர்நீதிமன்றம்

சென்னை, ஜன.31-

சென்னை அண்ணா நகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் தீர்ப்பை ஒத்திவைத்தது உயர்நீதிமன்றம். இன்றைய வழக்கு விசாரணையின் போது காவல்துறை தரப்பில், "காவல்துறை அதிகாரிகள், சிறுமியின் பெற்றோர் உள்ளிட்டோரிடம் ஆரம்பக் கட்ட விசாரணை நிறைவடைந்தது. சிறுமி




பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் யாரையும் காப்பாற்றும் எண்ணம் அரசுக்கு இல்லை," இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

# ரியல் எஸ்டேட் துறைக்கான 18% ஜிஎஸ்டி வரியை அடியோடு நீக்க வேண்டும்: பொன்குமார் வலியுறுத்தல்

சென்னை, ஜன.31-

ரியல் எஸ்டேட் தொழில் செய்வோர் நலச் சங்கம் அமைப்பின் மாதவரம் தொகுதி நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு மாதவரம் அமைப்பாளர் ஆர்.அசோக்குமார் தலைமை தாங்கினார். தொகுதி செயலாளர் டி.கதிர்வேல், பொருளாளர் எ.வெங்கடேஸ்வரன் முன்னிலை வகித்தனர். தொகுதி தலைவர் இ.தர்மா வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவரும், ரியல் எஸ்டேட் தொழில் செய்வோர் நல சங்கத்தின் நிறுவனத்தலைவருமான பொன்குமார் பங்கேற்று தொகுதி நிர்வாகிகளுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். இதில் சங்கத்தின் மாநில செயலாளர் எஸ்.எம்.குமார், துணை தலைவர் து.ரஜினிராஜ், இணை செயலாளர் ஏ.ஜெ.நாகராஜ், அமைப்பு செயலாளர் எம்.அன்னலட்சுமி, சென்னை மண்டல




தலைவர் வி.பி.வில்லியம்ஸ் ஆகியோர் பேசினார்.

கூட்டத்தில் தலைவர் பொன்குமார் பேசுகையில், "தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் 11.19 விழுக்காடு பெற்று இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்வதற்கு காரணம் முதல்வர் மு.க.ஸ்டாலினின் அயராதப் பணி ஒரு பக்கம் என்றால், இன்னொரு பக்கம் இந்த பொருளாதார உயர்வுக்கு முக்கிய பங்களிப்பு அளித்திருப்பது ரியல் எஸ்டேட் துறையாகும். எனவே இந்த துறையைப் பாதுகாத்து தொழில் செய்பவர்களை மத்திய, மாநில அரசு ஊக்கப்படுத்த வேண்டும். பெருவாரியான மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும் துறையாக ரியல் எஸ்டேட் உள்ளது. எனவே இத்துறையில் ஏற்படக்கூடிய தடைகளை போக்கி எளிமைப்படுத்தி இந்த தொழிலை வளர்க்க வேண்டும். எனவே மத்தியிலும், மாநிலத்திலும் ரியல் எஸ்டேட் துறைக்கு தனி அமைச்சகத்தை ஏற்படுத்த வேண்டும்.இந்த துறைக்கான 18% ஜிஎஸ்டி வரியை அடியோடு நீக்க வேண்டும். தொழிலாளர்களை அரசு அங்கீகரித்து அவர்களுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும். அமைப்புசாரா பட்டியலில் இணைத்து நலவாரிய பயன் பெற்றிட நடவடிக்கை வேண்டும்" என்றார்.




# அரசு பள்ளித் தூதுவர் திட்டத்தை தொடங்கி வைத்தார் அமைச்சர் அன்பில் மகேஸ்

சென்னை, ஜன.31-

அரசு பள்ளித் தூதுவர் திட்டத்தை அமைச்சர் அன்பில் மகேஸ் தொடங்கி வைத்தார். பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இன்று (30.01.2026) சென்னை, அசோக் நகர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் அரசுப் பள்ளித் தூதுவர் திட்டத்தினை அரசுப் பள்ளித் தூதுவர்கள் பதவியேற்பு உறுதிமொழியில் கையொப்பமிட்டு தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து முன்னாள் மாணவர் வழிகாட்டுதல் திட்டத்தினை தொடங்கி வைத்து, விழுதுகள் செயலியினை வெளியிட்டார்.

இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. சந்தர மோகன்.பி மாநில திட்டக்குழு செயல் துணைத்தலைவர் ஜெ.ஜெயரஞ்சன், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் மற்றும் விண்வெளித்துறை செயலர் வி.நாராயணன், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை, மாதிரிப்பள்ளிகள் உறுப்பினர் செயலர் ஆர்.சுதன் (வி.ஓய்வு), பள்ளிக்கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன், அரசுப் பள்ளி தூதுவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000